**கவனிக்க.**- 2006.05.26 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1448 - 2006 ජූනි 02 වැනි සිකුරාදා - 2006.06.02

1448 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 324 |
| விலைக்கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 325 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**-தேயிலை ஆராய்ச்சிச் சபை (திருத்தம்) சட்டமூலம் 2006, ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, யூன் 09 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, மே 26 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# அரசாங்க அறிவித்தல்கள்

## 1974 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கம்பனிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

பிரிவு 3 (2) இன் கீழான விலக்களிப்புக்கான பணிப்பு

*1974 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கம்பனிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, வியாபார, வர்த்தக, பாவனையாளர் விவகாரங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி அமைச்சர் ஜெயராஜ் பர்னாந்துபுள்ளே ஆகிய நான், நிதியமைச்சரின் ஒருப்பாட்டுடன், இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதும், விலக்களிப்புக்கு விண்ணப்பித்துள்ளதுமான பின்வரும் கம்பனியைச் சொல்லப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையிலிருந்து விலக்களிக்கின்ற பணிப்பொன்றை இத்தால் வழங்குகின்றேன்.*

ஜெயராஜ் பர்னாந்துபுள்ளே, பா.உ.
வியாபார, வர்த்தக, பாவனையாளர் விவகாரங்கள்
மற்றும் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி அமைச்சரும்
பாராளுமன்றத்தின் பிரதான அரசாங்கக் கொறடாவும்.

கொழும்பு,
2006, மே 08.

**அட்டவணை**

பேர் ஆர்ஸ்லெவ் ஏ/எஸ்

6-24

---

## 1974 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கம்பனிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

3 (2) ஆம் பிரிவின் கீழான விலக்களிப்புக்கான பணிப்பு

*1974 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கம்பனிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, வியாபார, வர்த்தக, பாவனையாளர் விவகாரங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி அமைச்சர் ஜெயராஜ் பர்னாந்துபுள்ளே ஆகிய நான், நிதியமைச்சரின் ஒருப்பாட்டுடன், இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டதும், விலக்களிப்புக்கு விண்ணப்பித்துள்ளதுமான பின்வரும் கம்பனியைச் சொல்லப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையிலிருந்து விலக்களிக்கின்ற பணிப் பொன்றை இத்தால் வழங்குகின்றேன்.*

ஜெயராஜ் பர்னாந்துபுள்ளே, பா. உ.
வியாபார, வர்த்தக, பாவனையாளர் விவகாரங்கள்
மற்றும் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி அமைச்சரும்
பாராளுமன்றத்தின் பிரதான அரசாங்கக் கொறடாவும்.

கொழும்பு,
2006, மே 15.

**அட்டவணை**

மைடா கூட்டுத்தாபனம்

6-99

---

## 1974 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கம்பனிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

3 (2) ஆம் பிரிவின் கீழான விலக்களிப்புக்கான பணிப்பு

*1974 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கம்பனிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, வியாபார, வர்த்தக, பாவனையாளர் விவகாரங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி அமைச்சர் ஜெயராஜ் பர்னாந்துபுள்ளே ஆகிய நான், நிதியமைச்சரின் ஒருப்பாட்டுடன், இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டதும், விலக்களிப்புக்கு விண்ணப்பித்துள்ளதுமான பின்வரும் கம்பனியைச் சொல்லப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையிலிருந்து விலக்களிக்கின்ற பணிப்பொன்றை இத்தால் வழங்குகின்றேன்.*

ஜெயராஜ் பர்னாந்துபுள்ளே, பா. உ.
வியாபார, வர்த்தக, பாவனையாளர் விவகாரங்கள்
மற்றும் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி அமைச்சரும்
பாராளுமன்றத்தின் பிரதான அரசாங்கக் கொறடாவும்.

கொழும்பு,
2006, மே 15.

**அட்டவணை**

சர்வதேச வான் போக்குவரத்துக் கழகம்

6-100

---

## 1952 ஆம் ஆண்டின் திஸ்ஸமஹாராாமை யாத்திரிகச் சட்ட பிரமாணங்கள்

*1852 ஆம் ஆண்டின் திஸ்ஸமஹாராமை யாத்திரிகச் சட்ட பிரமாணத்தின் 3 ஆம் சரத்தின்படி திஸ்ஸமஹாராமை பிரதேச செயலாளரான திருமதி தீதா சிரியாணி பத்மகுலசூரிய ஆகிய நான் பின்வரும் காலப்பகுதியில் திஸ்ஸமஹாராம யாத்திரிகச் சட்டப் பிரமாணங்களின் நடைமுறைப்படுத்தும் காலமாக பிரகடனப் படுத்துகிறேன்.*

**2006 ஆம் ஆண்டு பொசன் வைபவம்**

| காலம் | |
|---|---|
| தொடக்கம் | வரை |
| 2006.06.06 | 2006.06.11 |

(திருமதி) டீ. எஸ். பத்மகுலசூரிய,
பிரதேச செயலாளர்,
திஸ்ஸமஹாராாமை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,திஸ்ஸமஹாராாமை.
2006, யூன் 15.

6-115

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## ருஹுணு அபிவிருத்தி வங்கி - எல்பிட்டிய கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியால் வழங்கப்பட்ட கடனை அறவிட்டுக்கொள்ளும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ருஹுணு அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்டதொரு தீர்மானம்*

1997 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் கீழும் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையாலும் வெளியிடப்பட்ட 1998.04.24 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய அமைக்கப்பட்டுள்ள ருஹுணு அபிவிருத்தி வங்கிக்குச் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2006.02.20 ஆந் திகதி நடாத்தப்பட்ட ருஹுணு அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையின் கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள ஆலோசனை விசேடமாகவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது :-

"ருஹுணு அபிவிருத்தி வங்கியின் பெயரில் சட்டத்தரணியும் பிரசித்தி பெற்ற நொத்தாரிசுமான திரு. கே. ஜே. டீ. லால்நன்தன என்பவரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள 2003.12.03 ஆந் திகதியும் 3092 ஆம் இலக்கமும் கொண்ட ஈட்டுமுறியின் வரவேண்டிய நிதி செலுத்துதல், "விஜய", ஓமத்த, கனேகொடையில் வசிக்கும் சந்தன புஷ்பகுமார பதிரகே, பதிரகே ரணவீர என்போரால் கைவிடப்பட்டுள்ளதாலும், அவ்வீட்டுமுறியின் கீழ் ஒரு இலட்சத்து எழுபத்தாறாயிரத்து எண்ணூறு ரூபா (ரூ. 1,76,800) நிதி ருஹுணு அபிவிருத்தி வங்கிக்குச் செலுத்தவேண்டியிருப்பதாலும், 2005.04.01 ஆம் திகதி முதல் வருடத்திற்கு 20% ஆக,ஒரு இலட்சத்து எழுபத்தாறாயிரத்து எண்ணூறு ரூபா (ரூ. 1,76,800) நிதிக்காக ஏலவிற்பனை திகதி வரை தொடர்ந்து வட்டியும் ஏலவிற்பனைச் செலவுகளும் அத்துடன் ஏதாவதொரு தொகை திரும்பக் கிடைத்திருப்பின் அவற்றைக் குறைத்துக்கொண்டு மீதிப் பணத்தை பெற்றுக்கொள்வதற்காக மாத்தறை அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளர் திரு. ஜீ. பீ. ஆனந்த என்பவரால் 3092 ஆம் இலக்க ஈட்டுமுறியின் கீழ் வங்கிக்கு ஈடாக வைக்கப்பட்டுள்ள ஆதனங்களைப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டுமென்று அவ்வங்கியின் பணிப்பாளர் சபையினால் இத்தால் தீரமானிக்கப்பட்டுள்ளது."

### ஈடு வைக்கப்பட்டுள்ள ஆதனங்கள் பற்றிய விவரணம்

தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், பெந்தர வலல்லாவிடி கோறளையில் பஹல ஓமத்தயிலமைந்துள்ள ஹிவனாவகுரெ அத்தரதுவெ, பாவரபல, பில்லெகும்புரெகொட காணி அல்லது ஹிவனாவகுரே அத்தரதுவ எனும் - வடக்கே : பீ. எந்திரிஸ் அப்புவும் இன்னும் சிலருக்கும் உரிய ஹிவனா வகுரெ வயலும் ; கிழக்கே : டீ. பீ. 255884 ஆம் இலக்க காணியும் தொன் சார்லிஸ் த சில்வா ஜயசூரிய என்பவருக்கு உரிய காணியும் ; தெற்கே : டி. பபப்புவிற்கும் இன்னும் சிலருக்கும் உரிய ஹிவனாவகுரெ ஓவிடயும் ; மேற்கே : பீ. எந்திரிஸ் அப்புவும் இன்னும் சிலரும் உரிமை கோரும் ஹிவனாவகுரெ வயலும் என்பன எல்லைகளாக அமைந்த காணிக்கும் ஊடாக இருக்கும் சிறு வீதிக்கான நிலத்தினை தவிர்த்து ஒரு ஏக்கர் ஒரு றூட் பன்னிரண்டு பேர்ச்சஸ் (1ஏ. 1றூ. 12பே.) விசாலமுடைய காணியும் நிலமும் அதிலடங்கியுள்ள இறப்பர் பயிர்ச் செய்கை உட்பட மரம், செடி, பழவகை ஆகிய சகலதுமாகும். இவ்வாதனம் பி 483/125 நடை, 9/143 இன் கீழ் 2003.12.12 ஆந் திகதி மொரவக காணிகள் பதிவு செய்யும் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டீ. ஜீ. விமலரத்ன,
முகாமையாளர்.

ருஹுணு அபிவிருத்தி வங்கி,
தலைமை அலுவலகம்,
பம்புரண,
மாத்தறை,
2006.02.16

6-95/1

---

## ருஹுணு அபிவிருத்தி வங்கி - ஊறகஸ்மங்ஹந்திய கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியால் வழங்கப்பட்ட கடனை அறவிட்டுக்கொள்ளும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ருஹுணு அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்டதொரு தீர்மானம்*

1997 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் கீழும் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையாலும் வெளியிடப்பட்ட 1998.04.24 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய அமைக்கப்பட்டுள்ள ருஹுணு அபிவிருத்தி வங்கிக்கு சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2006.02.20 ஆந் திகதி நடாத்தப்பட்ட ருஹுணு அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் சபையின் கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள ஏகமனதாக ஆலோசனை தீர்மானிக்கப்பட்டுள்ளது :-

"ருஹுணு அபிவிருத்தி வங்கியின் பெயரில் சட்டத்தரணியும் பிரசித்தி பெற்ற நொத்தாரிசுமான திரு. ஏ. சுபசிங்ஹ என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2001.07.06 ஆந் திகதியும் 10634 ஆம் இலக்கமும் கொண்ட ஈட்டுமுறியின் கீழ் வரவேண்டிய நிதி செலுத்துதல், பெந்தோட்டை, கோமடே, இல. 275 இல் வசிக்கும் இத்தபான பயாகலகே செம்சன் என்பவரால் கைவிடப்பட்டுள்ள தாலும், அவ்வீட்டுமுறியின் கீழ் ஒரு இலட்சத்து நாற்பத்தி மூவாயிரத்து இருநூறு ரூபா (ரூ. 1,43,200) நிதி ருஹுணு அபிவிருத்தி வங்கிக்குச் செலுத்தவேண்டியிருப்பதாலும், 2005.05.31 ஆந் திகதி முதல் வருடத்திற்கு 20% ஆக, ஒரு இலட்சத்து நாற்பத்திமூவாயிரத்து இருநூறு ரூபா (ரூ. 1,43,200) நிதிக்காக ஏலவிற்பனை திகதி வரை தொடர்ந்து வட்டியும், ஏலவிற்பனைச் செலவுகளும் அத்துடன் ஏதாவதொரு தொகை திரும்பக் கிடைத்திருப்பின் அவற்றைக் குறைத்துக்கொண்டு மீதிப் பணத்தினைப்பெற்றுக் கொள்வதற்காக மாத்தறை அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளர் திரு. ஜீ. பீ. ஆனந்த என்பவரால் 10634 ஆம் இலக்க ஈட்டுமுறியின் கீழ் வங்கிக்கு ஈடாக வைக்கப்பட்டுள்ள ஆதனங்களைப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டுமென்று அவ்வங்கியின் பணிப்பாளர் சபையினால் இத்தால் தீரமானிக்கப்பட்டுள்ளது."

**ஈடு வைக்கப்பட்டுள்ள ஆதனங்கள் பற்றிய விவரணம்**

தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், பெந்தொட்ட வலல்லாவிடி கோறளையில் கீழ் கிராமங்கள் ஆறுக்குரிய எலகாகெ மருமுல்லேயிலமைந்துள்ள, புவக்வத்த எனும் காணியின் பிரித்து வேறாக்கப்பட்ட 7 ஆம் இலக்கத் துண்டின் - வடக்கே : இக்காணியின் 9 ஆம் இலக்கத் துண்டும் வீதியும் ; கிழக்கே : இக்காணியின் 8 ஆம் இலக்கத் துண்டும் ; தெற்கே : இக்காணியின் ஒரு பகுதியும் ; மேற்கே : இக்காணியின் 3 ஆம் இலக்கத் துண்டும் எல்லைகளாக அமைந்த முப்பத்து நான்கு தசம் ஆறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 34.6பே.) விசாலமுடைய காணியும் அதற்குரிய சகலதுமாகும். இவ்வாதனம் பி 307/55 நடைமுறை, 9/249 இன் கீழ் 2004.07.12 ஆந் திகதி பலப்பிடிய காணிகள் பதிவு செய்யும் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டீ. ஜீ. விமலரத்ன,
பொது முகாமையாளர்.

ருஹுணு அபிவிருத்தி வங்கி,
தலைமை அலுவலகம்,
பம்புரண,
மாத்தறை,
2006.02.16

6-95/2

---

**ருஹுணு அபிவிருத்தி வங்கி - ஊரகஸ்மங்ஹந்திய**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியால் வழங்கப்பட்ட கடனை அறவிட்டுக்கொள்ளும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ருஹுணு அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்டதொரு தீர்மானம்*

1997 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் கீழும் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையாலும் வெளியிடப்பட்ட 1998.04.24 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய அமைக்கப்பட்டுள்ள ருஹுணு அபிவிருத்தி வங்கிக்கு சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2006.02.20 ஆந் திகதி நடாத்தப்பட்ட ருஹுணு அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் சபையின் கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள ஆலோசனை ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது :-

"ருஹுணு அபிவிருத்தி வங்கியின் பெயரில் சட்டத்தரணியும் பிரசித்தி பெற்ற நொத்தாரிசுமான திரு. ஏ. சுபசிங்ஹ என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2003.10.06 ஆந் திகதியும் 9994 ஆம் இலக்கமும் கொண்ட ஈட்டுமுறியின் கீழ் வரவேண்டிய நிதி செலுத்துதல், கொஸ்கொட, பெலேகஸ்பலாத, ஸ்ரீ ஸ்வர்ணகிரி விஹாரை மாவத்தயில் வசிக்கும் நைதுவாஹந்தி ஜயசேன/இலந்தாரிதேவ மியுலின் நோனா, தேஹிங்க நிர்மலா விஜேசிங்ஹ த சில்வா ஆகியோரால் கைவிடப்பட்டுள்ளதாலும், அவ் ஈட்டுமுறியின் கீழ் ஒரு இலட்சத்து ஐம்பத்து ஆறாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று ஏழு ரூபா (ரூ. 1,56,897) நிதி ருஹுணு அபிவிருத்தி வங்கிக்குச் செலுத்தவிருப்பதாலும், 2005.12.14 ஆந் திகதி முதல் வருடத்திற்கு 13.5% ஆக, ஒரு இலட்சத்து ஐம்பத்து ஆறாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று ஏழு ரூபா (ரூ. 1,56,897) நிதிக்காக ஏலவிற்பனை திகதி முதல் தொடர்ந்து வட்டியும் ஏலவிற்பனைச் செலவுகளையும் அத்துடன் ஏதாவதொரு திரும்பக் கிடைத்திருப்பின் அவற்றைக் குறைத்துக்கொண்டு மீதிப் பெற்றுக் கொள்வதற்காக மாத்தறை அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளர் திரு. ஜீ. பீ. ஆனந்த என்பவரால் 9994 ஆம் இலக்க ஈட்டுமுறியின் கீழ் வங்கிக்கு ஈடாக வைக்கப்பட்டுள்ள ஆதனங்களைப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டுமென்று அவ்வங்கியின் பணிப்பாளர் சபையினால் இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது."

**ஈடு வைக்கப்பட்டுள்ள ஆதனங்கள் பற்றிய விவரணம்**

தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், பெந்தர வல்லாவிடி கோறளையில் பெலேகஸ்பலாத கிராம அலுவலர் பிரிவில் பெலேகஸ்பலாத கிராமத்திலமைந்துள்ள, எத்தொடுவகெலே எனும் காணியின் பிரித்து வேறாக்கப்பட்ட 169 ஆம் இலக்க நிலத்துண்டின் - வடக்கே : 162 ஆம், 163 ஆம் இலக்கத் துண்டுகளும் ; கிழக்கே : 162, 170 ஆம் இலக்கத் துண்டுகளும் ; தெற்கே : 165 ஆம் இலக்கத் துண்டும்; மேற்கே : 163, 165 ஆம் இலக்கத் துண்டுகளும் எல்லைகளாக அமைந்த ஒரு ஏக்கர் முப்பத்தொரு பேர்ச்சஸ் (1ஏ. 0றூ. 31பே.) விசாலமுடைய காணியும் அதிலடங்கியுள்ள சகல மரம், செடி, பழவகை என்பனவுமாகும். இவ்வாதனம் LDOB 08/2 நடை. 9/109 இன் கீழ் 2003.10.08 ஆந் திகதி பலபிடிய காணிகள் பதிவு செய்யும் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டீ. ஜீ. விமலரத்ன,
பொது முகாமையாளர்.

ருஹுணு அபிவிருத்தி வங்கி,
தலைமை அலுவலகம்,
பம்புரண,
மாத்தறை,
2006.02.16

6-95/3

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

2005.04.25 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது -

"1. பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. டி. எச். சந்திரரத்ன அத்தாட்சிப்படுத்திய 2004.04.06 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 13796 இன் பேரில் அப்போவ, அலவ்வ என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. தம்மிக சந்தன ஹேவகே மற்றும் திரு. தம்மசேன

ஹேவகே ஆகியோரிடமிருந்து கூட்டாகவும் பல்வேறாகவும் முதலும் 2005.02.14 வரை வட்டியும் ஐந்து இலட்சத்து இருபத்திமூவாயிரத்து எழுபத்தி மூன்று ரூபா ஐம்பத்தாறு சதமும் (ரூ. 5,23,073.56) அத்துடன் நான்கு இலட்சத்து எண்பத்திமூவாயிரத்து முந்நூற்றி முப்பது ரூபா (ரூ. 4,83,330) ஆண்டுக்கு 18 வீதத்தில் 2005.02.15 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. மேலே '1' இல் குறிப்பிட்ட தொகையையும் அத்துடன் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு மேற்குறிப்பிட்ட ஈட்டுமுறி இல. 1376 ஆல் காப்பளித்து ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 24, ரொறிங்டன் றோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரமவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்குமமைய இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தம்பதெனி, ஹத்பத்து உடுகஹ தெற்கு கோரளை தம்பதெனியில் அம்போவ கிராமத்தில் அமைந்த மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1228 இல் விபரித்ததும் தற்சமயம் ஒன்றிணைத்து ஒரே காணித்சொத்தாக்கப்பட்டதுமான மூன்று காணிகள் ருக்கஹமுல கும்புரயின் பகுதி, ருக்கஹம்புகர தற்சமயம் கார்டனின் பகுதி மற்றும் கரந்தகஹகும்புர தற்சமயம் கார்டன் என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் குணசோம ரத்நாயக்க தயாரித்த 1978.05.01 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1228 இல் துண்டு இல. 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணிதுண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 12287 இன்படி வடக்கில் : துண்டு இல. 01 உம் ; கிழக்கில் : எல். பி. விமலதாச உரிமைகோரும் காணியும் கம்சபாவ றோட்டும் ; தெற்கில் : எலயும் ; மேற்கில் : எஸ். எம். உக்குபண்டா உரிமைகோரும் காணியும் எலயும் எல்லைகளாகக் கொண்டு மூன்று றூட் முப்பத்திநான்கு தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 3றூ. 34.5பே.) விஸ்தீரணமுடைய காணியும் அத்துடன் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், வீடுகள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். மேற்குறிப்பிட்ட காணியூடாக நவதல்வத்தயிலிருந்துமாபோவிட்டியவுக்குச் செல்லும் பாதையைத் தவிர்த்து.

மேற்குறிப்பிட்ட காணி பின்வருமாறு விபரித்த பாரிய காணிகளிலிருந்து பிரிக்கப்பட்ட குறித்த பகுதியும் ஆகும்:-

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில், தம்பதெனி, ஹத்பத்து தம்பதெனி உடுகஹ தெற்கு கோரளையில் அம்போவ கிராமத்தில் அமைந்த "ருக்கஹமுல கும்புர" என அழைக்கப்படும் காணியின் எல்லைகளாவன- வடக்கில் : வெரெல்லபொலய மற்றும் அஸ்ஸெத்தும கும்புர உரிமைகோரும் வயலும் ; கிழக்கில் : வெலேஹேனயும் ; தெற்கில் : தெமட்டகஹ கும்புரயும்; மேற்கில் : கரந்தம்கஹகும்புரயும் எல்லைகளாகக் கொண்டு இரண்டு பேல நெல் விளைச்சலுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது குருநாகல் காணிப்பதிவகத்தில் எவ் 874/165 இல் பதிவுசெய்யப்பட்டது.

2. மேற்குறிப்பிட்ட அம்போவ கிராமத்தில் அமைந்த "ருக்கஹ கும்புர" என அழைக்கப்படும் காணியின் எல்லைகளாவன - வடக்கில்: வெரெல்லபொலய மற்றும் அஸ்ஸெத்தும கும்புர உரிமைகோரும் வயலும் ; கிழக்கில் : வெலேஹேனயும் ; தெற்கில்: தெமட்டகஹகும்புரயும் ; மேற்கில் : கரந்தரகஹகும்புரயும் எல்லைகளாகக் கொண்டு இரண்டு பேல நெல் விளைச்சல் விஸ்தீரணமுடையதும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது குருநாகல் காணிப் பதிவகத்தில் எவ் 1053/95 இல் பதிவுசெய்யப்பட்டது.

3. மேற்குறிப்பிட்ட அம்போவ கிராமத்தில் அமைந்த "கரந்தகஹமுல" தற்சமயம் கார்டன் என அழைக்கப்படும் காணியின் எல்லைகளாவன - வடக்கில் : முதலைஹாமியும் ஏனையோரும் உரிமைகோரும் வயலும் ; கிழக்கில் : ஜோதினிதேயும் ஏனையோரும் உரிமைகோரும் வயலும் ; தெற்கில் : பிற்றர்சிங்கோவும் ஏனையோரும் உரிமைகோரும் வயலும் ; மேற்கில் : எலயும், எல்லைகளாகக் கொண்டு பதினைந்து லாச்சம் நெல் விளைச்சல் காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது குருநாகல் காணிப்பதிவகத்தில் எவ் 1053/281 இல் பதிவுசெய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபைக் கட்டளைப்படி,

எம். டி. பிரேமரத்ன,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
அளவ்வ கிளை.

6-119

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சடடத்தின் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

2006.01.18 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்தாவது -

1. பிரசித்த நொத்தாரிசு எட்மண்ட் குலரத்ன அத்தாட்சிப்படுத்திய 2005.03.30 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 9179 இன் பேரில் ஹலியாமுல்ல, பானகமுவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி சாவுல் ஹமீத்கே அல்லது சாஹுல் ஹமீத்கே சித்தி ரிபாயா மற்றும் திரு. மொஹமட் இப்றாஹீம் மர்சூக் ஆகியோரிடமிருந்து கூட்டாகவும் பல்வேறாகவும் முதலும் 2005.10.07 வரை வட்டியும் மூன்று இலட்சத்து அறுபதாயிரத்து எழுநூற்றி இருபது ரூபா அறுபத்தைந்து சதம் (ரூ. 3,60,720.65) அத்துடன் மூன்று இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா (ரூ. 3,50,000) ஆண்டுக்கு 19 வீதத்தில் 2005.10.08 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. மேலே '1' இல் குறிப்பிட்ட தொகையையும் அத்துடன் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் பிரிவின்கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு மேற்குறிப்பிட்ட ஈட்டுமுறி இல. 9179 ஆல் காப்பளித்து ஈடுவைத்த சொத்தை விற்பதற்கு இல. 24, ரொறிங்டன் றோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரமவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன்

திருத்தங்களுக்குமமைய இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வேஉடவில்லி, ஹத்பத்து மெதுரே கோரளையில் பானகமுவயில் எனினும் மிகவும் சரியானது ஹாதிராமுல்லயில் அமைந்ததும் "துத்திரிபிட்டிய ஹேன" என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் செனரத் விஜேரத்ன தயாரித்த 1994.09.06 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1593 இல் துண்டு 1 என விபரித்த காணித்துண்டு வடக்கில் : எவ். வி. பி. 2636 இல் துண்டு 105 மற்றும் எவ். வி. பி. 2636 இல் துண்டு 19 உம் ; கிழக்கில் : கோருமடயிலிருந்து பிரதான றோட் வரை வி. சி. றோட்டும் ; தெற்கில் : எஸ். எம். ஜே. ஆப்தீனுக்கு ஒதுக்கிய வரைபடம் இல. 1593 இல் துண்டு 2 உம் ; மேற்கில் : எவ். வி. பி. 2636 இல் துண்டு 105 உம் எல்லைகளாகக் கொண்டு இரண்டு றூட் முப்பத்திரெண்டு தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றூ. 32.5பே.) அல்லது ஹெக்டேயர்கள் சைபர் தசம் இரண்டு எட்டு நான்கு ஒன்று (ஹெக். 0.2841) விஸ்தீரணமுடைய காணியும் அத்துடன் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள் மறறும் சகலதும் ஆகும். இது குருநாகல் காணிப் பதிவகத்தில் ஏ 1216/236 இல் பதிவுசெய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபைக் கட்டளைப்படி,

எச். டி. குணதிலக,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
ரிதிகம கிளை.

6-122

---

## ருஹுணு அபிவிருத்தி வங்கி - வெலிகம கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியால் வழங்கப்பட்ட கடனை அறவிட்டுக் கொள்ளும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ருஹுணு அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்டதொரு தீர்மானம்

1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் கீழும் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையாலும் வெளியிடப்பட்ட 1998.04.24 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய அமைக்கப்பட்டுள்ள ருஹுணு அபிவிருத்தி வங்கிக்கு சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2006.02.20 ஆந் திகதி நடாத்தப்பட்ட ருஹுணு அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் சபையின் கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது :-

"ருஹுணு அபிவிருத்தி வங்கியின் பெயரில் சட்டத்தரணியும் பிரசித்தி பெற்ற நொத்தாரிசுமான திரு. பீ. ஜீ. ஸீ. நானாயக்கார என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2000.09.15 ஆந் திகதியும், 5466 ஆம் இலக்கமும், 2000.10.17 ஆந் திகதியும் 5486 ஆம் இலக்கமும், பிரசித்த நொத்தாரிசு திரு. முணிதாச விக்ரமதுங்க என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 1998.10.08 ஆந் திகதியும், 8392 ஆம் இலக்கமும் உடைய ஈட்டுமுறியின் கீழ் வரவேண்டிய நிதி செலுத்துதல், வெலிகம, பெகோடியன, சத்தாதிஸ்ஸ மாவத்தையில் "ரத்ன" யில் வசிக்கும் நானாயக்கார, ஹல்லொருவகே குணரத்ன என்பவரால் கைவிடப்பட்டுள்ளதாலும், அவ் ஈட்டுமுறியின் கீழ் ஒரு இலட்சத்து தொண்ணூற்றிஐயாயிரத்து எண்ணூறு ரூபா (ரூ. 1,95,800) நிதி, இரண்டு இலட்சத்து இரண்டாயிரம் ரூபா (ரூ. 2,02,000) நிதி, எண்பத்தாறாயிரத்து எண்ணூறு ரூபா (ரூ. 86,800) நிதியும் தொண்ணூற்றொன்பதாயிரத்து நூறு ரூபா (ரூ. 99,100) நிதியும் ருஹுணு அபிவிருத்தி வங்கிக்குச் செலுத்தவேண்டியிருப் பதாலும், அக்கடன் தொகைக்காக தொடர்ந்து 2004.02.17, 2003.02.17, 2005.02.28, 2004.12.24 ஆகிய தினங்களிலிருந்து மேலே குறிப்பிட்ட கடன் தொகைக்காக தொடர்ந்து 25%, 25%, 23%, 25%, ஏலவிற்பனை திகதி வரை மேலும் வட்டியும் ஏலவிற்பனைச் செலவுகளும் அத்துடன் ஏதாவதொரு தொகை திரும்பக் கிடைத்திருப்பின் அவற்றைக் குறைத்துக்கொண்டு மீதிப்பணத்தை பெற்றுக் கொள்வதற்காக மாத்தறை அதிகாரம்பெற்ற ஏலவிற்பனை யாளர் திரு. ஜீ. பீ. ஆனந்த என்பவரால் 5466, 5486, 8392 ஆகிய ஈட்டுமுறியின் கீழ் வங்கிக்கு ஈடாக வைக்கப்பட்டிருக்கும் ஆதனங் களைப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டுமென்று அவ்வங்கியின் பணிப்பாளர் சபையினால தீர்மானிக்கப் பட்டுள்ளது.

**ஈடு வைக்கப்பட்டுள்ள ஆதனங்கள் பற்றிய விவரணம்**

*5466 ஆம் இலக்க அட்டவணை*

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், வெலிகம் கோரளையில், பெனேடியனயில் அமைந்துள்ள கொரொக்கஹ விலஹேனயில் அமைந்துள்ள பீ. பீ, 10741 ஆம் இலக்க, 1, 2, 3, 4, 5, 6, 7 என்ற காணியின் பிரித்து வேறாக்கப்பட்ட 1ஏ என்ற இலக்கத் துண்டின் எல்லைகளாக - வடக்கே : எப். வீ. பீ. 559, 459, 460,559,446 என்ற காணியும் ; கிழக்கே மற்றும் தெற்கே : இக்காணியின் இல. 01பி ; மேற்கே : டீ. பீ. 177680 என்ற எல்லைக்குள் வீதியும் அமைந்த ஒரு ஏக்கரும், ஒரு றூட் பதினாறு தசம் ஐந்து பேர்ச்சஸ் (1ஏ. 1றூ. 16.5பே.) விசாலமுடைய காணியின் சகல மரம், செடி, பழவகை என்பவற்றுடன் நிலமும்.

2. தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில் வெலிகம் கோரளையில், பெனேடியானவிலமைந்த கொரொக்கஹவில ஹேனயில் அமைந்துள்ள பீ. பீ, 10741 குறித்த 1, 2, 3, 4, 5, 6, 7 என்ற இலக்கக் காணியின் பிரித்து வேறாக்கப்பட்ட 02 ஆம் இலக்கத் துண்டின் எல்லைகளாக - வடக்கே : எப். வீ. பீ. 559, 446 என்ற காணியும்; கிழக்கே : டீ. பீ. 157177; தெற்கே : இக்காணியின் 4 ஆம் இலக்கத் துண்டும் ; மேற்கே : வீதியும் எல்லைகளாகக அமைந்த ஒரு ஏக்கரும் 21 பேர்ச்சஸ் (1ஏ. 0றூ. 21பே.) விசாலமுடைய காணியின் சகல மரம், செடி, பழவகை என்பவற்றுடன் நிலமும்.

3. தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில் வெலிகம் கோரளையில், பெனேடியானவிலமைந்த பீ. பீ, 10741 குறித்த 1, 2, 3, 4, 5, 6, 7 என்ற இலக்கக் காணியின் பிரித்து வேறாக்கப்பட்ட 04 ஆம் இலக்கத் துண்டின் எல்லைகளாக - வடக்கே : இக் காணியின் இல. 02 ; கிழக்கே : டீ. பீ. 118540 ; தெற்கே : இக்காணியின் 6 ஆம் இலக்கம்; மேற்கே : வீதியும் எல்லைகளாக அமைந்த ஒரு ஏக்கரும் இரண்டு றூட் முப்பத்தேழு பேர்ச்சஸ் (1ஏ. 2றூ. 37பே.) விசாலமுடைய காணியின் சகல மரம், செடி, பழவகை என்பவற்றுடன் நிலமும்.

4. தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில் வெலிகம் கோரளையில், பெனேடியானவிலமைந்த கொரொக்கஹவில ஹேனயில் அமைந்துள்ள பீ. பீ, 10741 குறித்த 1, 2, 3, 4, 5, 6, 7 என்ற இலக்கக் காணியின் பிரித்து வேறாக்கப்பட்ட 06 ஆம் இலக்கத் துண்டின் எல்லைகளாக - வடக்கே : இக் காணியின் 4 ஆம் இலக்கமும்;

கிழக்கே : 118540 ; தெற்கே : பீ. பீ. 10741 இல் 08 ஆம் இலக்கம் ; மேற்கே : வீதியும் எல்லைகளாக அமைந்த ஒரு ஏக்கர் மூன்று றூட் இருபத்திநான்கு பேர்ச்சஸ் (1ஏ. 3றூ. 24பே.) விசாலமுடைய காணியின் சகல மரம், செடி, பழவகை என்பவற்றுடன் நிலமும்.

இவ்வாதனம் டி 936/19, 20, 21, 22 இன் கீழ் 2000.09.15 ஆந் திகதி மாத்தறை காணிகள் பதிவு செய்யும் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

*5486 ஆம் இலக்க அட்டவணை*

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், வெலிகம் கோரளையில், பெனேடியனயிலமைந்துள்ள பீ. பீ, 10741 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள 08 ஆம் இலக்க கொரககஹவிலஹேன எனும் காணியின் பீ. எஸ். ஜயவர்தன அதிகாரம் பெற்ற நிலஅளவை யாளரினால் 1995.07.25 ஆந் திகதி அளந்து அமைக்கப்பட்ட 4428 ஆம் இலக்க காணியின் வடக்கே : பீ. 10741 ஆம் இலக்கத் துண்டும் ; கிழக்கே டீ. பீ. 118540 ஆம் காணி ; தெற்கே : கிராம சபை வீதி ; மேற்கே : வீதியொன்றிற்காக வேறாக்கப்பட்ட நான்கறை மீற்றர் அகலமுடைய வீதியும், இதில் ஒரு ஏக்கர், மூன்று றூட், முப்பத்தேழு பேர்ச்சஸ் (1ஏ. 3றூ. 37பே.) விசாலமுடைய காணியின் சகல மரம், செடி, பழவகை என்பவற்றுடன் காணியும் அதிலமைந்துள்ள சகல கட்டிடங்களுமாகும்.

அக்காணி மாத்தறை காணிகள் பதிவு செய்யும் அலுவலகத்தில் டி 979/147, 28/10 என்ற புத்தகத்தில் 2000.10.18 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது.

*8392 ஆம் இலக்க அட்டவணை*

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், வெலிகம் கோரளையில், பெனேடியனவில் அமைந்துள்ள கொரககஹவிலஹேன யில் அமைந்துள்ள பீ. பீ. 10741 இன் குறிப்பிட்ட 1, 2, 3, 4, 5, 6, 7 என்ற இலக்கம் கொண்ட காணியின் பிரித்து வேறாக்கப்பட்ட 1ஏ ஆம் இலக்கத் துண்டின் எல்லைகளாக – வடக்கே : : எப். வீ. பீ. 559, 459, 460,559,446 என்ற காணியும் ; கிழக்கே : வீதியும் தெற்கே : இக்காணியின் இல. 01பி ; மேற்கே : டீ. பீ. 177680 என்ற எல்லைகளைக் கொண்ட ஒரு ஏக்கர் ஒரு றூட் பதினாறு தசம் ஐந்து பேர்ச்சஸ் (1ஏ. 1றூ. 16.5பே.) விசாலமுடைய காணியின் சகல மரம், செடி, பழவகை என்பவற்றுடன் காணியின் அதிலமைந்துள்ள சகல கட்டிடங்களுமாகும்.

2. தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், வெலிகம் கோரளையில், பெனேடியனவில் அமைந்துள்ள கொரககஹவிலஹேன யில் அமைந்துள்ள பீ. பீ. 10741 இன் குறிப்பிட்ட 1, 2, 3, 4, 5, 6, 7 என்ற காணியின் பிரித்து வேறாக்கப்பட்ட 2 ஆம் இலக்கத் துண்டின் எல்லைகளாக – வடக்கே : : எப். வீ. பீ. 559, 446 என்ற காணியும் ; கிழக்கே : டீ. பீ. 157177; தெற்கே : இக்காணியின் இல. 04 ஆவது துண்டும் ; மேற்கே : வீதியும் என்ற எல்லைகளுக்குள் அமைந்துள்ள ஒரு ஏக்கர் இருபத்தொரு பேர்ச்சஸ் (1ஏ. 0றூ. 21பே.) விசாலமுடைய காணியின் சகல மரம், செடி, பழவகை என்பவற்றுடன் நிலமும் அதிலமைந்துள்ள சகல கட்டிடங்களுமாகும்.

3. தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், வெலிகம் கோரளையில், பெனேடியனவில் அமைந்துள்ள கொரககஹவிலஹேன யில் அமைந்துள்ள பீ. பீ. 10741 இன் குறிப்பிட்ட 1, 2, 3, 4, 5, 6, 7 என்ற காணியின் பிரித்து வேறாக்கப்பட்ட 4 ஆம் இலக்கத் துண்டின் எல்லைகளாக – வடக்கே : : இக்காணியின் இல. 02 ; கிழக்கே : டீ. பீ. 118540; தெற்கே : இக்காணியின் இல. 06 ; மேற்கே : வீதியும் எல்லைகளாக அமைந்த ஒரு ஏக்கர் இரண்டு றூட் முப்பத்தேழு பேர்ச்சஸ் (1ஏ. 2றூ. 37பே.) விசாலமுடைய காணியின் சகல மரம், செடி, பழவகை என்பவற்றுடன் காணியின் அதிலமைந்துள்ள சகல கட்டிடங்களும்.

4. தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், வெலிகம் கோரளையில், பெனேடியனவில் அமைந்துள்ள கொரககஹ விலஹேனயில் அமைந்துள்ள பீ. பீ. 10741 இன் குறிப்பிட்ட 1, 2, 3, 4, 5, 6, 7 என்ற காணியின் பிரித்து வேறாக்கப்பட்ட 6 ஆம் இலக்கத் துண்டின் எல்லைகளாக – வடக்கே : இக்காணியின் இல. 04 ; கிழக்கே : டீ. பீ. 118540 ; தெற்கே : பீ. பீ. 10741 இன்08 ஆம் இலக்கம் ; மேற்கே: வீதியும் எல்லைகளாக அமைந்த இதில் ஒரு ஏக்கர் மூன்ற றூட் இருபத்திநான்கு பேர்ச்சஸ் (1ஏ. 3றூ. 24பே.) விசாலமுடைய காணியின் சகல மரம், செடி, பழவகை என்பவற்றுடன் நிலமும் அதிலமைந்துள்ள சகல கட்டிடங்களுமாகும்.

5. தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், வெலிகம் கோரளையில், பெனேடியனவில் அமைந்துள்ள பீ. பீ. 10741 ஆம் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள 8 ஆம் இலக்க கொறொக்கஹவிலஹேன எனும் காணியின் திரு. ஸீ. எஸ். ஜயவர்தன அதிகாரம் பெற்ற நிலஅளவையாளரினால் 1995.07.25 ஆந் திகதி அளந்து அமைக்கப்பட்ட 4428 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் எல்லைகளாக – வடக்கே : : பீ. பீ. 10741 இன் 06 ஆம் இலக்கத் துண்டும் ; கிழக்கே : டீ. பீ. 118540 ஆம் இலக்கத் துண்டும் ; தெற்கே: கிராம சபை வீதியும் ; மேற்கே : வீதிக்காக வேறாக்கப்பட்டுள்ள நான்கரை மீற்றர் அகலமுடைய வீதியும், அதிலுள்ள ஒரு ஏக்கர் மூன்று றூட் முப்பத்தேழு பேர்ச்சஸ் (1ஏ. 3றூ. 37பே.) விசாலமுடைய காணியின் சகல மரம், செடி, பழவகை என்பவற்றுடன் நிலமும் அதிலமைந்துள்ள சகல கட்டிடங்களுமாகும்.

இவ்வாதனம் டி936/19, 22, 979/147 இன் கீழ் 1998.10.08 ஆந் திகதி மாத்தறை காணிகள் பதிவு செய்யும் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டீ. பீ. விமலரத்ன,
முகாமையாளர்.

ருஹுணு அபிவிருத்தி வங்கி,
தலைமை அலுவலகம்,
பம்புரண,
மாத்தறை,
2006.02.16

6-95/4

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 4.45 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டுக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.-** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை-2006**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூன்** | .. | வெள்ளி | 02.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.05.2006 |
| | | வெள்ளி | 09.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.05.2006 |
| | | வெள்ளி | 16.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.06.2006 |
| | | வெள்ளி | 23.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.06.2006 |
| | | வெள்ளி | 30.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.06.2006 |
| **யூலை** | .. | வெள்ளி | 07.07.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.06.2006 |
| | | வெள்ளி | 14.07.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.06.2006 |
| | | வெள்ளி | 21.07.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.07.2006 |
| | | வெள்ளி | 28.07.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.07.2006 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 04.08.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.07.2006 |
| | | வெள்ளி | 11.08.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.07.2006 |
| | | வெள்ளி | 18.08.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.08.2006 |
| | | வெள்ளி | 25.08.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.08.2006 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006, சனவரி 01.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.